# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 091/ந/2018

ஆணை எண். 114/2018

நாள் : 03/05/2018

**திரு M. டேனியல் ( எ) மா. தனராஜன்,**
**சென்னை – 600 077.** – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

– எதிர் மனுதாரர்

சென்னை, நூரம்பல் கிராமம், எண்.96, தெருவீதியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் திரு எம். டேனியல் (எ) மா. தனராஜன் அவர்களின் 27.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 091/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் படிவம் –1 இல் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, நூரம்பல் கிராமம், எண்.96, தெருவீதியம்மன் கோயில் தெரு முகவரியில் வசிக்கும் திரு எம். டேனியல் (எ) மா. தனராஜன் என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திருவேற்காடு நகராட்சித் தனக்கு வழங்கிய 29.04.2009, 29.07.2009, 23.09.2010, 22.02.2010, 26.10.2010 மற்றும் 16.08.2017 ஆகிய கடிதங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு 1–எண்ணிட்ட படிவத்துடன் இணைத்து அனுப்பியுள்ளார். "முறைகேடாக தனியார் நிறுவத்திற்கு சொத்துவரி சலுகை செய்தது" என்று படிவம் –1 இல் மட்டும் குறிபிட்டதுடன், முறையான முறையீட்டு மனு எதனையும் இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட படிவும் –1 குறைபாடான முறையீட்டு மனு எனக் கருதப்பட்டு, 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ( முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி எண்.8–இன் கீழ் தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. கே. டேனியல் (எ) மா. தனராஜன்,
**நெ.96, தெருவீதியம்மன் கோயில் தெரு, நூம்பல்,**
**சென்னை – 600 077.**

2. **நகராட்சி ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி,**
**திருவேற்காடு.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**